இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

நற்செய்தி மற்றும் திருஅவைக்கு துறவறத்தார் ஆற்றும் விலைமதிப்பற்ற பணிக்கு நன்றி என்றும், ஒவ்வொரு வழலிலும் கடவுளின் அன்பின் அடையாளங்களாகவும் அமைதிக்கான கருவிகளாகவும் இருக்க வேண்டும் என்றும் எடுத்துரைத்தார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

# கேட்டல், பங்கேற்றலில் ஈடுபடுவதே உண்மையான கூட்டொருங்கியக்கம்



திருத்தந்தை பதினான்காம் லியோ (AFP or licensors)

திருத்தந்தை அவர்களின் வாழ்த்துச்செய்தியானது திருப்பீட செயலர் கர்தினால் பியெத்ரோ பரோலின் அவர்களின் கையொப்பமிடப்பட்டு பெனடிக்ட் சபையின் வழிவந்த கமால்தோலிஸ் சபையின் முன்னாள் தலைவர் பெருமதிப்பிற்குரிய அருள்தந்தை தோம் மேத்தியோ ஃபெரார் (OSB) அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

ஒன்றாகப் பயணம் செய்வது திருஅவையின் வாழ்க்கை மற்றும் பணி என்றும், உண்மையான கூட்டொருங்கியக்கத்திற்கு திருமுழுக்கு பெற்ற அனைவருக்கும் கேட்பதும் பங்கேற்பதும் தேவை என்றும் வலியுறுத்தியுள்ளார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

கமால்டோலியில் "கூட்டொருங்கியக்கத் தலத்திருஅவையில் ஆயர்" என்ற தலைப்பில் நடைபெறும் ஒரு மாநாட்டின் நிகழ்விற்கு அனுப்பியுள்ள வாழ்த்துச்செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

திருத்தந்தை அவர்களின் வாழ்த்துச்செய்தியானது திருப்பீட செயலர் கர்தினால் பியெத்ரோ பரோலின் அவர்களின் கையொப்பமிடப்பட்டு பெனடிக்ட் சபையின் வழிவந்த கமால்தோலிஸ் சபையின் முன்னாள் தலைவர் பெருமதிப்பிற்குரிய அருள்தந்தை தோம் மேத்தியோ ஃபெரார் (OSB) அவர்களுக்கு, அனுப்பப்பட்டுள்ளது.

இம்மாநாட்டில் பங்கேற்கும் கருத்துரையாளர்கள், பங்கேற்பாளர்கள் உதவியாளர்கள் அனைவருக்கும் தனது அரவணைப்பையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ள திருத்தந்தை அவர்கள், மாநாட்டின் இறையியல், அழைத்தல், கூட்டொருங்கியக்கக் கொள்கை, ஆயர்கள் அவர்தம் செயல்கள், ஆகியவற்றுக்கும் தனது பாராட்டுகளை வெளிப்படுத்தியுள்ளார்.

மெரினா ராஜ் – வத்திக்கான்

# அன்பின் அடையாளங்களாக அமைதியின் கருவிகளாக...



சிறு குழந்தையை அரவணைக்கும் திருத்தந்தை பதினான்காம் லியோ (ANSA)

## நாம் ஒவ்வொருவரும் கடவுளின் அன்பான திட்டத்திற்கு பதிலளிக்கத் தயாராக இருக்க அன்னை மரியாவின் ஆசீரை நாடுவோம்

நற்செய்தி மற்றும் திருஅவைக்கு துறவறத்தார் ஆற்றும் விலைமதிப்பற்ற பணிக்கு நன்றி என்றும், ஒவ்வொரு வழியிலும் கடவுளின் அன்பின் அடையாளங்களாகவும் அமைதிக்கான கருவிகளாகவும் இருக்க வேண்டும் என்றும் எடுத்துரைத்தார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

அக்டோபர் 8 புதன்கிழமை வத்திக்கான் தூய பேதுரு பெருங்கோவில் வளாகத்தில் கூடியிருந்த ஏறக்குறைய 600 ஆயிரத்திற்கும் அதிகமான திருப்பயணிகளுக்கு வழங்கிய மறைக்கல்வி உரையின் இறுதியில் வழங்கிய செப விண்ணப்பங்களின்போது இவ்வாறு எடுத்துரைத்தார்.

நவீன உலகின் பல எல்லைகளில் நம்பிக்கைக்கு சான்றளிப்பதில் ஒருபோதும் சோர்வடைய வேண்டாம் என்று வலியுறுத்திய திருத்தந்தை அவர்கள், மறைப்பணி துணிச்சலுடன் நற்செய்தி மற்றும் மனித முன்னேற்றத்தின் புதிய பாதைகளை அடையாளம் காண வேண்டும் என்றும் தெரிவித்தார்.

போலோக்னா, பெர்கமோ, காசலே மான்ஃபெராதோ மற்றும் காலியாரி மறைமாவட்டங்களின் திருப்பயணிகளையும், பேராயர் ஜூசப்பே பதுரியையும் அன்புடன் வரவேற்று வாழ்த்திய திருத்தந்தை அவர்கள், இளைஞர்கள், நோயாளிகள் மற்றும் புதுமணத் தம்பதிகளை வாழ்த்தினார்.

அக்டோபர் மாதத்தில் புனித செபமாலையின் அரசியாக அழைக்கப்படும் மரியாவிடம் நம் எண்ணங்களைத் திருப்ப அனைவருக்கும் அழைப்பு விடுத்த திருத்தந்தை அவர்கள், நாம் ஒவ்வொருவரும் கடவுளின் அன்பான திட்டத்திற்கு பதிலளிக்கத் தயாராக இருக்க அன்னை மரியாவின் ஆசீரை நாடுவோம் என்றும் கூறினார்.

மெரினா ராஜ் - வத்திக்கான்

# பேரழிவு தரும் போரினால் கொல்லப்படும் குழந்தைகள்

## கொல்லப்படும் ஒவ்வொரு குழந்தையும் ஈடுசெய்ய முடியாத இழப்பு



தனது குழந்தையின் நினைவிடத்தில் வருந்தி கண்ணீர் சிந்தும் தாய் (ANSA)

கடந்த 700 நாட்களுக்கும் மேலாக, காசாவின் குழந்தைகள் ஒரு பேரழிவு தரும் போரில் கொல்லப்பட்டு வருகின்றனர், பலர் காயமுற்றுள்ளனர், மற்றும் இடம்பெயர்ந்துள்ளனர் என்றும், நமது பொதுவான மனிதகுலத்திற்கு அவமானமான இச்செயல் மிகவும் வருத்தத்திற்குரியது என்றும் எடுத்துரைத்துள்ளது யுனிசெஃப் பன்னாட்டுக் குழந்தைகள் நல அமைப்பு.

கடந்த இரண்டு ஆண்டுகளில், குறைந்தது 1,000 புதிதாகப் பிறந்த குழந்தைகள் உட்பட, காசா பகுதி முழுவதும் அதிர்ச்சியூட்டும் 64,000 குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளனர் அல்லது ஊனமுற்றுள்ளனர் என்றும், தடுக்கக்கூடிய நோய்களால் இன்னும் அதிகமானோர் இறந்துள்ளனர் அல்லது இடிபாடுகளுக்குள் புதைக்கப்பட்டுள்ளனர் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

காசா நகரில் பஞ்சம் நீடிக்கிறது மற்றும் தெற்கு நோக்கி பரவி வருகிறது என்றும், அங்கு குழந்தைகள் ஏற்கனவே மோசமான நிலையில் வாழ்கின்றனர். குறிப்பாக குழந்தைகளிடையே ஊட்டச்சத்து குறைபாடு நெருக்கடி மோசமாக உள்ளது. போதுமான உணவு இல்லாமல் பல மாதங்கள் குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் வளர்ச்சிக்கு நிரந்தர சேதத்தை ஏற்படுத்தியுள்ளன என்றும் தெரிவித்துள்ளது.

போர் நிறுத்தத்திற்கான தேவை இதைவிட அவசரமானது என்றும், இஸ்ரேலிய ஷெல் தாக்குதல்கள் காசா நகரம் மற்றும் பிற நகரங்களைத் தொடர்ந்து தாக்குவதால், குறைந்தது 14 குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளனர். என்றும் குறிப்பிட்டுள்ளது.

கொல்லப்படும் ஒவ்வொரு குழந்தையும் ஈடுசெய்ய முடியாத இழப்பு எனவே, காசாவின் அனைத்து குழந்தைகளுக்காகவும், இந்தப் போர் இப்போது முடிவுக்கு வர வேண்டும் என்று வலியுறுத்தி தனது அறிக்கையினை நிறைவு செய்துள்ளது யுனிசெஃப் பன்னாட்டுக் குழந்தைகள் நல அமைப்பு.

மெரினா ராஜ் - வத்திக்கான்

# நன்றி, பிரமாணிக்கம், நம்பிக்கையின் 360-ஆம் ஆண்டை காலேஜ் ஜெனரல் கொண்டாடுகிறது




பினாங்கு: காலேஜ் ஜெனரல் குருத்துவக் கல்லூரி தனது 360-ஆம் ஆண்டு விழாவை (CG360) மூன்று நாள் கொண்டாட்டமாக நடத்தியது. இதில் பேராயர்கள், குருக்கள், பொதுநிலைக்குத் திரும்பிய முன்னாள் மாணவர்கள், தங்கள் குடும்பத்தினருடன் வந்திருந்த முன்னாள் குருமாணவர்கள், தற்போதைய மாணவர்கள், மற்றும் கம்போடியா, தாய்லாந்து, சிங்கப்பூர், கூச்சிங், கோத்தா கினாபாலு, பினாங்கு ஆகிய இடங்களிலிருந்து வந்திருந்த வெளிநாட்டு விருந்தினர்கள் என ஏறக்குறைய 230 பேர் கலந்துகொண்டனர். 1665-ஆம் ஆண்டில், சயாமில் உள்ள அயுத்தயாவில் இக்குருத்துவக் கல்லூரியை நிறுவிய பாரிஸ் வெளிநாட்டு மறைபரப்பு சபையின் (MEP) உறுப்பினர்களும் இந்த நிகழ்வில் பங்கேற்றனர். அவர்களின் தைரியமும் தொலைநோக்குப் பார்வையுமே இக்கல்லூரியின் அடித்தளமாகும்.

'நன்றி, பிரமாணிக்கம் மற்றும் நம்பிக்கை' என்ற கருப்பொருளுடன் நடைபெற்ற இக்கொண்டாட்டம், குருத்துவக் கல்லூரியின் வளமான மரபுக்கான நன்றியுடனும், கிறிஸ்துவின் அழைப்புக்குப் புதுப்பிக்கப்பட்ட பிரமாணிக்கத்துடனும், வருங்கால குருக்களுக்கான நம்பிக்கையுடனும் பிணைக்கப்பட்டிருந்தது.

முதல் நாள் – நன்றி: செப்டம்பர் 29, தலைமைத் தூதர்களின் விழாவன்று, பேராயர் ஜூலியன் லியாவ் திருப்பலிக்குத் தலைமை தாங்கினார். திருப்பீடத் தூதர் பேராயர் வோஜ்சியெக் ஸலூஸ்கி, முன்னாள் மாணவர்கள் தங்கள் சாட்சிய வாழ்வைத் தொடர ஊக்குவித்தார். 92 வயதான MEP சபை உறுப்பினர் அருட்தந்தை ஜீன் லு ஹவர், 'அமோர், லேபர் எட் பியெட்டாஸ்' – அதாவது அன்பு, உழைப்பு மற்றும் பக்தி – என்ற கல்லூரியின் ஸ்தாபக நெறியை நினைவுகூர்ந்தார். ஓய்வுபெற்ற பேராயர் ஜான் ஹா, நன்றியுணர்வே கிறிஸ்தவ வாழ்வின் இதயம் என்பதைப் பங்கேற்பாளர்களுக்கு நினைவுபடுத்தினார். அருட்தந்தை ராயன் இன்னாசி முத்து, கல்லூரியின் வரலாறு மற்றும் அதன் தொடர்ச்சியான பணிக்காக நன்றி தெரிவித்தார். அன்றைய தினம் மாலைத் திருப்புகழ், நற்கருணை ஆராதனை, மற்றும் தோழமையுடன் நிறைவடைந்தது.

இரண்டாம் நாள் – பிரமாணிக்கம்: அழைத்தலுக்கும் பணிக்கும் மீண்டும் தங்களை அர்ப்பணிப்பதை இந்த நாள் சிறப்பித்துக் காட்டியது. ஆயர் பெர்னார்ட் பால் திருப்பலிக்குத் தலைமை









தாங்கி, ஆக்கப்பூர்வமான பிரமாணிக்கத்திற்கும் இரக்கத்திற்கும் அழைப்பு விடுத்தார். MEP சபையின் தலைவர் அருட்தந்தை வின்செென்ட் செனேஷால், கல்லூரியின் நீடித்த மறைபரப்புப் பணியின் உணர்வைப் பற்றிப் பேசினார். கர்தினால் வில்லியம் கோ, பிரமாணிக்கம் என்பது கடவுளின் அழைப்புக்கு ஆற்றல்மிக்க மற்றும் வளர்ந்துவரும் ஒரு பதில் என்று தனது தனிப்பட்ட சாட்சியத்தைப் பகிர்ந்து கொண்டார்.

மூன்றாம் நாள் – நம்பிக்கை: குருத்துவக் கல்லூரியின் தலைவர் கர்தினால் செபாஸ்டியன் பிரான்சிஸ் திருப்பலி நிறைவேற்றி, பங்கேற்பாளர்கள் மலேசியத் திருஅவைக்காகக் கனவுகாண்பவர்களாகவும் தொலைநோக்குப் பார்வை கொண்டவர்களாகவும் இருக்குமாறு கேட்டுக்கொண்டார். முன்னாள் மாணவர்கள் தங்கள் பணியைப் பற்றிய உருக்கமான சாட்சியங்களைப் பகிர்ந்து கொண்டனர். அதைத் தொடர்ந்து, அமரர் அருட்தந்தை ஜோசப் ரூட்டன்ஸ் அவர்களின் முடிக்கப்படாத ஓவியமான 'மரியாவின் இராக்கினித்துவம்' குறித்து அருட்தந்தை சைமன் ஆனந்த் ஒரு சிந்தனையை வழங்கினார்.

CG360 என்பது கடந்த காலத்தின் ஒரு நினைவுகூரல் மட்டுமல்ல; 360 ஆண்டுகளுக்கு முன்பு விதைக்கப்பட்ட விதை ஆசியாவிலும் அதற்கு அப்பாலும் திருஅவைக்காகத் தொடர்ந்து பலன் தருகிறது என்பதை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

## MEP அருட்தந்தையர்கள் பினாங்கிற்கு வருகை



புக்கிட் மெர்தாஜாம்: புனித அன்னை பசிலிக்காவின் பங்குச் சமூகம், பாரிஸ் வெளிநாட்டு மறைபரப்பு சபையின் (MEP) தூதுக்குழுவினரை வரவேற்றது. பினாங்கு குருத்துவக் கல்லூரியின் 360-வது ஆண்டு விழாவிற்காக வருகை தந்த இக்குழுவினர், திருப்பலிக்குத் தலைமை தாங்கினர். இக்குழுவிற்கு புனோம் பென் ஆயர் ஒலிவியே ஷ்மித்தேஸ்லர் தலைமை தாங்கினார். அவருடன் MEP சபையின் தலைவர் அருட்தந்தை வின்செென்ட் செனேஷால், காலேஜ் ஜெனரல் கல்லூரியின் முன்னாள் திருமறைப் பேராசிரியர் அருட்தந்தை ஜீன் லு ஹவர், மற்றும் புனோம் பென்னைச் சேர்ந்த அருட்தந்தை வி சாம்னாங் ஆகியோர் வந்திருந்தனர். அருட்தந்தை பெர்னார்ட் ஹயசிந்த், SJ, மற்றும் திருத்தொண்டர் லாசரஸ் ஜொனாதன் ஆகியோரும் அவர்களுடன் இணைந்திருந்தனர்.

மூன்று நூற்றாண்டுகளுக்கும் மேலாக, MEP மறைபரப்புப் பணியாளர்கள் ஆசியா முழுவதும் தைரியத்துடனும் தியாகத்துடனும் நற்செய்தியைப் பரப்பியுள்ளனர். தாய்லாந்து, வியட்நாம், கம்போடியா, மலேசியா போன்ற நாடுகளில் 4,300-க்கும் மேற்பட்டோர் பணியாற்றியுள்ளனர்; அவர்களில் 23 பேர் புனிதர்களாகத் திருநிலைப்படுத்தப்பட்டுள்ளனர். மலேசியாவில், அவர்களின் நீடித்த மரபு, பினாங்கில் உள்ள குருத்துவக் கல்லூரியில் காணப்படுகிறது. 'மறைசாட்சிகளின் கல்லூரி' என்று அழைக்கப்படும் இதன் முன்னாள் மாணவர்களில் புனிதர்களும் மறைசாட்சிகளும் அடங்குவர். அவர்களின் நினைவாக இப்போது அதன் சிற்றாலயத்தில் புனித சின்னங்கள் வைக்கப்பட்டுள்ளன.



93 வயதான அருட்தந்தை ஜீன் லு ஹவர், குருத்துவக் கல்லூரியின் உருவாக்கும் பணிக்கு ஒரு வாழும் சாட்சியாகத் திகழ்கிறார். தாம் உருவாக்க உதவிய பல குருக்களை அவர் மகிழ்ச்சியுடன் நினைவுகூர்கிறார். MEP அருட்தந்தையர்களின் இந்த வருகை, வரலாற்றை நினைவுகூருவது மட்டுமல்லாமல், அவர்களின் நீடித்த சாட்சிய வாழ்விற்கான ஒரு நன்றிக் கொண்டாட்டமாகவும் அமைந்தது. கிறிஸ்துவின் பணி ஆசியாவில் தொடர்ந்து உத்வேகம் அளித்து, பலன் தந்துகொண்டிருக்கிறது என்பதற்கு இது ஒரு நினைவூட்டலாகும்.

## 29ஆம் ஞாயிறு – விண்ணப்பத்தை கேட்பவரே என் கண்ணீரை காண்பவரே...!

**பொதுக்காலம் 29ஆம் ஞாயிறு.**
**வி.ப 17: 8-13, 2 தீமோ 3:14-4: 2, லூக்18: 1-8**

இன்று திருஅவை பொதுக்காலத்தின் 29ஆம் ஞாயிறைக் கொண்டாடுகிறது.

இன்றைய முதல் வாசகத்தில் அமலேக்கியர் இஸ்ராயேலரை எதிர்த்து போரிட வந்தனர். அவர்களை எதிர்த்து யோசுவா போரிட மலையின் உச்சியில் மோசே, ஆரோன், கூர் ஆகியோர் கைகளை உயர்த்தி இறைவனிடம் மாலைவரை வேண்டினர். முடிவில் யோசுவா வெற்றி கொண்டார்.

நற்செய்தியில் விதைவைப் பெண் ஒருத்தி தமக்கு நீதி வேண்டும் எனக்கோரி, இறைவனுக்கும் மக்களுக்கும் அஞ்சாத ஒரு நடுவரிடம் நீதி வேண்டி அனுதினமும் முறையிட்டாள்.

ஆனாலும் அந்த நடுவன் அப்பெண்ணின் வேண்டுதலைக் கண்டுக் கொள்ளாமல் இருந்து வந்தான். முடிவில் அந்நடுவன் அபெண்ணின் நச்சரிப்பால் நீதி வழங்குகிறான்.

இந்த உவமையில், யாருக்குமே பயப்படாத கல்நெஞ்சுக்கார நடுவன், அந்த விதவைப் பெண்ணுக்குத் தீர்ப்பு கூறுகிறான் என்றால், நேர்மையும், பாசமும், அக்கறையும் கொண்ட நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்மை எவ்வாறு வழி நடத்துபவராக இருப்பார்.

இங்கு கூறப்படும் கைம்பெண், வறுமைக்கும், ஆதரவற்ற நிலைக்கும் பிறரால் ஒதுக்கப்படும்போது என்ன செய்வாள். இறை பயமோ, மனித நேயமோ, அவளின் அவல நிலையோ மனதில் கொண்டு கரிசனம் கொண்டோ எதையும் முன்னிட்டு அந்நடுவன் தீர்ப்புச் சொல்லவில்லை. மாறாக அவளுக்கு துன்பம்தான் பெருகியது. அவள் வெறுமனே அமைதியாக இல்லை. மாறாக கருணை கொண்ட இறைவனிடம் தன் நிலையை சொல்லி மன்றாடினாள். அனுதினமும் தமது விண்ணப்பத்தை சொல்லி முறையிட்டாள். அவளின் தொந்தரவு தங்க மாட்டாது, அவளின் இடைவிடாத விண்ணப்பம் முடிவில் கேட்கப்பட்டது. அவளுக்கு நீதி கிடைத்தது.

நாமும் நம்முடைய விண்ணப்பங்களை அன்றே முறையிட்டு அப்பொழுதே கிடைக்க வேண்டும் என்று அவசரபட்டு நம்பிக்கை இழந்து விடாமல், விடாது கேட்டுக்கொண்டு வந்தால் நிச்சயம் கிடைக்கும் எனும் முழு நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும்.

நாம் சோர்ந்து போகாது, ஊக்கத்துடன் செபத்தில் நிலைத்திருப்போமானால் கைம்மாறு பெற்றே தீருவோம். துன்பம், துக்கம், துயரம், சோதனைகள் மத்தியில் வாழும் நாம், விதவை பெண் போல சோர்ந்து போகாது செபத்தில் நிலைத்திடுவோம். தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும் எனும் ஊக்கமுள்ள வார்த்தையில் நம்பிக்கை கொள்வோம். கிறிஸ்துவின் அன்பிலிருந்து நம்மை பிரிப்பவர் யார்.

ஆ.வி.டேவிட். குளுவாங்

**பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்**

உங்கள் பங்குகளில் நடைப்பெற்ற சமீபத்திய நிகழ்வுகளைக் குறித்து செய்திகள் புகைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் படைப்புகளை tamil@herald.com.my என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். திரு அவையின் மக்களின் வாழ்வையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்த உதவியமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.